## முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த புதல்வர் மு.க.முத்து மறைவு!

# “எங்கள் துயரில் பங்கெடுத்து ஆறுதல் கூறியவர்களுக்கு நன்றி!”

## வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

சென்னை, ஜுலை 21-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது அண்ணன் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த புதல்வர் மு.க.முத்து அவர்களின் மறைவுக்கு நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் இரங்கலும் - ஆறுதலும் தெரிவித்தவர்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்து வலைதளப் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

**எனது அண்ணன் மு.க.முத்து அவர்களது மறைவுக்கு நேரில் வந்து எங்களது துயரில் பங்கெடுத்து ஆறுதல் சொன்ன சகோதரர் செல்வப்பெருந்தகை, தோழர் கே.பாலகிருஷ்ணன், சகோதரர் எழுச்சித் தமிழர் தொல்.திருமாவளவன், பேராசிரியர் காதர் மொகிதீன், பேராசிரியர் ஜவாஹிருல்லா, வசீகரன், சகோதரர் துரை வைகோ, சகோதரி தமிழிசை சௌந்தரராஜன், கரு. நாகராஜன் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சத்யராஜ், விக்ரம் உள்ளிட்ட கலையுலகைச் சேர்ந்த கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், நேரில் வர முடியாத சூழலில் தொலைபேசி வாயிலாக இரங்கலைப் பகிர்ந்துகொண்ட சகோதரர் ராகுல் காந்தி, ஓ.பன்னீர்செல்வம், ஜி.கே.வாசன் மற்றும் எனது இல்லம் தேடி வந்து ஆறுதல் தெரிவித்த சீமான் உள்ளிட்ட அனைவர்க்கும் நன்றி.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## சென்னையில் முதல் முதலாக – இராயப்பேட்டை ஆர்த்தோ மெட் மருத்துவமனையில்

# உயர்திறன் வாய்ந்த எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

சென்னை, ஜுலை 21 -

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுச் செயலாளரும் இராயப்பேட்டை ஆர்த்தோ மெட் மருத்துவமனை மேலாண்மை இயக்குநருமான டாக்டர் அ.சுபேர்கான் , மருத்துவமனையின் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி ரெஹானா கான் ஆகியோரின் ஆர்த்தோ மெட் மருத்துவமனையில் உயர் திறன் வாய்ந்த எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையம் திறப்பு விழா இன்று (21.07.2025 ) காலை 10 மணியளவில் 85, இராயப்பேட்டை பிரதான சாலையில் நடைபெறுகிறது.

இந்த உயர்திறன் வாய்ந்த எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று அவர்கள் திறந்து வைக்கிறார்.

## எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கி இருப்பதால்

# அமித்ஷா பிடியிலிருந்து அ.தி.மு.க. மீள முடியாது!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கை!

*சென்னை,ஜுலை. 21-*

*எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்ட அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கி இருப்பதால் அமித்ஷா பிடியிலிருந்து அ.தி.மு.க. மீள முடியாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*



*தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*2014 மக்களவை தேர்தலில் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா நரேந்திர மோடிக்கு எதிராக மோடியா? லேடியா? என்று கடுமையான பிரச்சாரத்தை மேற்கொண்டார் 2016 இல் அவர் மறைகிற வரை நீட், உதய் மின்திட்டம் உள்ளிட்ட தமிழக மக்கள் விரோத திட்டங்களை நிறைவேற்ற மறுத்து வந்தார். ஆனால் அவரது மறைவிற்கு பிறகு முதலமைச்சராக வந்த எடப்பாடி பழனிச்சாமி தமிழக கிராமப்புற மாணவர்களின் மருத்துவக் கனவை சீரழிக்கும் ஒன்றிய பாஜக அரசின் நீட் தேர்வை முதல்முறையாக 2017 இல் நடைமுறைக்கு கொண்டுவந்தார். ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி செய்த 2014 வரை தமிழகத்தில் நீட் திணிக்கப் படவில்லை. அதேபோல உதய் மின் திட்டத்தை அன்றைய அதிமுக அரசு ஏற்றுக்கொண்டது. ஆனால் அத்திட்டத்தின் படி 75 சதவீத கடனை தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்க வேண்டும். ஆனால் 34.88 சதவீத கடன் தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மீதி கடனை ஈடுகட்ட எடப்பாடி அரசு நடவடிக்கை எடுக்காததால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடன் சுமை 2011 - 2012 இல் இருந்ததை விட 2021 இல் ஒரு லட்சத்து 35 ஆயிரம் கோடி ரூபாய் ஆக உயர்ந்து - அதாவது 332 சதவீதம் அதிகரித்தது. இதனால் மின்சார வாரியம் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியது. 8 ஆண்டுகளில் மின் கட்டண உயர்வு செய்யாத காரணத்தால் 2022 இல் செய்ய வேண்டிய நிலை திமுக அரசுக்கு ஏற்பட்டது. இதற்கு காரணம் அதிமுக ஆட்சியே தவிர, திமுக ஆட்சி அல்ல.*

*2021 சட்டமன்ற தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிட்ட அ.தி.மு.க. - பாஜக, 2023 இல் கூட்டணியை முறித்துக்கொண்டதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். 2024 மக்களவை தேர்தல் மட்டுமல்ல, 2026 சட்டமன்ற தேர்தலிலும் பாஜகவுடன் கூட்டணி இல்லை என்று அறிவித்தார். அந்த அறிவிப்பு வெளிவந்த உடனே அதிமுக தலைமை அலுவலகத்தில் தொண்டர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடினார்கள். ஆனால் காலப்போக்கில் உள்துறை அமைச்சர் அமித்ஷா கொடுத்த நிர்பந்தத்தின் காரணமாக பாஜக கூட்டணியில் சேரவேண்டிய நிர்பந்தம் அதிமுகவுக்கு ஏன் ஏற்பட்டது என்பதை எடப்பாடி பழனிசாமி இது வரை விளக்கவில்லை.*

**வாய் மூடி இருந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள்!**

*சமீபத்தில் மதுரையில் நடந்த முருகன் மாநாட்டில் திராவிட இயக்கத்தையும், பெரியார், அண்ணா உள்ளிட்ட தலைவர்களை இழிவுபடுத்தி வீடியோ வெளியிட்டபோது மேடையில் அமர்ந்திருந்த உதயகுமார், வேலுமணி உள்ளிட்ட அதிமுக முன்னாள் அமைச்சர்கள் வாய்மூடி மௌனியாக இருந்தது ஏன்? திராவிட இயக்கத்தை அழிப்போம், ஆன்மீகத்தை வளர்ப்போம் என்றும், அரசு கட்டுப்பாட்டில் இருந்து கோயில்களை விடுவிக்க வேண்டும் என்றும் முருகன் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியபோது அதை எதிர்க்க துணிவில்லாமல் அதிமுக ஜால்றா அரசியல் நடத்தியது. ஆனால், திமுக தலைமையிலான கூட்டணியில் உள்ள காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஜால்றா அடிப்பதாக கூறுவது மல்லாந்து படுத்துக் கொண்டு எச்சில் துப்புவதற்கு சமமாகும்.*

**அ.தி.மு.க. ஆட்சியில் கடன் சுமை அதிகரிப்பு**

*அதேபோல தமிழகத்தின் கடன்சுமை அதிகரித்துவிட்டதாக எடப்பாடி பழனிசாமி பேசியிருக்கிறார். 2011 இல் அதிமுக ஆட்சி அமைந்தபோது, திமுக ஆட்சி வைத்த கடன் ரூபாய் ஒரு லட்சம் கோடி. ஆனால் 2021 இல் ஆட்சியை விட்டு அதிமுக விலகுகின்ற பொது வைத்திருந்த கடன் ரூ.5.7 லட்சம் கோடி. 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் பெற்ற கடன் ரூ. 4.18 லட்சம் கோடி. இந்நிலையில் தமிழகத்தின் கடன் சுமையை பற்றி பேசுகிற எடப்பாடி பழனிசாமி ஒன்றிய பாஜக அரசின் கடன் சுமையை பற்றி பேச துணிவு இருக்கிறதா? 2014 இல் ஒன்றிய காங்கிரஸ் கூட்டணி அரசு வைத்துச்சென்ற கடன் ரூ. 55 லட்சம் கோடி. ஆனால் 2025 இல் ஒன்றிய பாஜக அரசின் கடன் ரூ. 185 லட்சம் கோடி. 1947 முதல் 2014 வரை 67 ஆண்டுகளில் ஒன்றிய அரசின் கடன் ரூ. 55 லட்சம் கோடி தான். ஆனால் 2014 முதல் 2025 வரை 11 ஆண்டுகளில் ரூ. 130 லட்சம் கோடி ஒன்றிய பாஜக அரசு கடன் வைத்திருக்கிறது. இதன்படி இந்தியாவில் தனிநபர் கடன் ரூ. 1 லட்சத்து 50 ஆயிரம். வரலாறு காணாத கடன் சுமையால் பொருளாதார பேரழிவை விமர்சனம் செய்யாமல் இருக்கும் எடப்பாடி பழனிசாமி பாஜகவுக்கு ஜால்றா அடிப்பது ஏன்?*

*ஒன்றிய அரசின் 3 கருப்பு வேளாண் சட்டங்களுக்கு ஆதரவு, சிறுபான்மையினரை குறிவைத்து கொண்டுவரப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்ட ஆதரவு, உதய் மின் திட்டத்தில் சேர்ந்து மின் கட்டண உயர்வுக்கு காரணமாக இருந்த அதிமுகவை விட ஒரு ஜால்றா கட்சி வேறு எதுவும் இருக்க முடியாது. புதிய கல்விக்கொள்கை என்ற பெயரில் மும்மொழி கொள்கை திணிப்பு, மும்மொழி கொள்கையை ஏற்கவில்லை என்றால் கல்வித் துறைக்கு நிதி வழங்க மறுப்பு, தொகுதி சீரமைப்பு என்று கூறி தென் மாநில நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கும் முயற்சியை எதிர்க்காத அதிமுகவை விட ஒரு அடிமை கட்சி வேறு எதுவும் இருக்க முடியாது, எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்கள் ஊழல் குற்றச் சாட்டுக்களில் சிக்கி அமலாக்கத்துறை, வருமானவரித் துறையின் பிடியில் இருக்கிற வரை அமித்ஷாவின் பிடியில் இருந்து அதிமுக மீள முடியாது. அதனால் தான் தற்கொலைக்கு சமமான முடிவை அதிமுக எடுத்திருக்கிறது. எனவே எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணங்களில் மக்கள் முன்னால் நீலிக்கண்ணீர் வடிப்பதை எவரும் நம்பவும் மாட்டார்கள், ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள்.*

*இவ்வாறு கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் கிளியாநகர் ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாம் நடைபெற்றது அதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ, காஞ்சிபுரம் எம்பி ஜி.செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினர். அருகில் ஒன்றிய குழு பெருந்தலைவர் கண்ணன், ஒன்றிய செயலாளர் தம்பு, மாவட்ட கவுன்சிலர் மாலதி, கவுன்சிலர் சிவபெருமான் ஆகியோர் உள்ளனர்.

# கலைஞர் மகன் முதல்வர் ஸ்டாலின் அரசு மரியாதை!
# நிலை உயரச் செய்துவிட்டார் வாராயோ வாராயோ!

அள்ளக் குறையாத
அமுதத் தமிழமுதே
சொல்லாமல் சோராமல்
சொல்லரசே சென்றதெங்கே?

பிள்ளைக் கவியமுதாய்ப்
பீடுநடை நடந்தாய்!
கள்ளமில்லா வாழ்வரசே
கருணையே எங்கு சென்றாய்?

வெல்லும் தமிழ்ச் சொல்லை
வெற்றிக்கு அளித்தவனே!
வெல்லக் கவியமுதே
வேந்தனே சென்றதெங்கே?


நட்பின் நாயகனே
நடைப்பயண முதல்வனே!
சிட்டாய் பறப்பாயே
சீராளா சென்றதெங்கே?

உலகத் தமிழர்களை
உயிர்மூச்சாய்க் கொண்டவனே!
கலகம் விளைவிப்போர்
களைந்தவனே எங்கு சென்றாய்?

கொள்கைவழி நின்றாய்
கொடுமைகண்டு சீறினாயே
பல்துறை வித்தகனே
பாரரசே எங்கு சென்றாய்?

தள்ளாத வயதினிலும்
தளராமல் நின்றவனே
வெல்லும் தமிழுலகின்
வேரே எங்கு சென்றாய்?

சிரிப்பு அழகரசே
சிலிர்த்து ஒலித்திடுமே



விழிக்கும் உன் பார்வை
விரைந்து சென்றதேனோ?

காப்பியக் காவியங்கள்
கடமையாய்த் தந்தவனே
ஒப்பிலா நாயகனே
உத்தமனே எங்கு சென்றாய்?

ஒரு லட்சம் கவிதைகளை
ஓயாமல் எழுதியவன
கருமமே கண்ணான
காவியமே எங்கு சென்றாய்?

பண்டை அரசர்களின்
பேருருவாய் வந்தவனே!
சண்டமாருதம் செய்த
சாதனையே எங்கு சென்றாய்?

மீசை துடிக்க கவிபாடி
மீமிசை ஆட்கொண்டாய்
ஆசை கவிஇன்பம்
ஆரணங்கே எங்கு சென்றாய்?

தலைவர் கலைஞர்மகன்
தகுதிஅரசு மரியாதை
நிலைஉயரச் செய்துவிட்டார்
வாராயோ வாராயோ?

தலைவர் பெருமக்கள்
அணிவகுத்து நிற்கின்றார்
தலைமகனே பெருமகனே
தவமகனே வாராயோ?

எளிய மக்களெல்லாம்
ஏந்திய கொடையரசே!
அழுது புலம்புகிறார்
ஆரமுதே வாராயோ?

உலகம் முழுவதிலும்
உனைஅழைத்துக் கேட்கின்றார்
களம்கண்ட நாயகனே
தாயமுதே வாராயோ?

பெருங்கவிக்கோ உலகமெலாம்
பேராகி நின்றவனே
அருமைக் குலக்கொழுந்தே
அழுதாலும் வாராயோ?

கன்றாய்க் கதறுகிறோம்
கதிஇன்றிப் பிதற்றுகிறோம்
தென்றலே தேனமுதே
வாராயோ வாராயோ?

அன்னை அருகினிலே
அடக்கம் ஆனாயே
கண்ணே கற்பகமே
கவியாய் இருக்கின்றாய்!

ஆண்ட நாயகபுரம்
அகிலப் புகழ் பெறவே
மாண்ட பெருங்கவிக்கோ
மண்ணிலே வாழ்கின்றார்!

தமிழ்மாமணி **வா.மு.சே. திருவள்ளுவர்**

## பெரம்பலூர் மாவட்ட வர்த்தக அணி சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா!

# பாடாலூர் பெரியார் குடில் மாணவ,மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - சட்டமன்ற உறுப்பினர் எம் பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர்,ஜுலை 21-

பெரம்பலூர் மாவட்ட வர்த்தக அணி சார்பில், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தலைமையில், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் வெ.ரமேஷ் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் தலை வர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, ஆலத்தூர் மேற்கு ஒன்றியம்,

பாடாலூர் பெரியார் குடில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவு ஆகியவற்றை

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெக தீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு வழங்கினார்கள். இதில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப. பரமேஷ்குமார், வேப்பந்தட்டை மேற்கு

ஒன்றிய கழகச் செயலாளர் செ. நல்லதம்பி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.அருண், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்கள் நாராணயசாமி, அருண், செந்தில், கருப்பன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் இளையராஜா அமல்ராஜ், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எம்.ரெங்கராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## புழல் து. திருநாவுக்கரசு
## ஜுலை 21 (2019)



**இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**புழல் பேரூர்க் கழகத்தில் 13வது வார்டு செயலாளராகவும், பேரூர் மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும், அதன்பின் புழல் பேரூர்க் கழகச் செயலாளராக நான்கு முறையும், சென்னை வடக்கு மாவட்டம் 23வது வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகச் சொற்பொழிவாளராக பணியாற்றி தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**